**செய்தி வெளியீடு எண்: 010** **நாள்: 03. 01. 201 8**

# செய்தி வெளியீடு

## தொழில் நுட்பக் கல்வித் துறை

வாரிய பட்டயத் தேர்வுகள் ஏப்ரல் 2018 பழைய மாணவர்களுக்கு கருணை அடிப்படையில் மீண்டும் தேர்வு எழுத வாய்ப்பு வழங்குதல் தொடர்பாக.

தொழில் நுட்பக் கல்வித் துறையில் கீழ் நடத்தப்படவிருக்கும் ஏப்ரல் 2018 மற்றும் அக்டோபர் 2018 பட்டய தேர்வுகளின் போது **OR,NR,RR,RS,C,D,G,J** மற்றும் **K** பாடத்திட்டங்களில் நிலுவை வைத்துள்ள முன்னாள் பழைய மாணவர்களுக்கும் சிறப்பு கருணை அடிப்படையில் தேர்வு எழுத அரசாணை (D) எண். 335 /உயர்கல்வி (பி1) த் துறை, நாள்.09.11.2017–ல் வாய்ப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

2011ம் ஆண்டிற்கு முன் (2010 வரை) மூன்று வருடம் (முழு நேரம் ) Sandwich Courses (மூன்றரை வருடம்) மற்றும் 2010 ம் ஆண்டிற்கு முன் ( 2009 வரை ) நான்கு வருட பகுதி நேர பட்டயப்படிப்பில் சேர்ந்த அனைவரும்.

இத்திட்டத்தின்படி தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூபாய்.500/–தேர்வு கட்டணமாகவும் ரூபாய் 30/– மதிப்பெண் பட்டியல் கட்டணமாகவும், ரூபாய். 25/–பதிவுக்கட்டணமாகவும் தாங்கள் பயின்ற கல்லூரி முதல்வர் மூலமாக கீழ் கண்ட அட்டவணையின் படி செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| அபராதம் இன்றி செலுத்த கடைசி நாள் | 07.02.2018 |
| ரூபாய் 100/– அபராத்துடன் செலுத்த கடைசி நாள் | 14.02.2018 |
| தட்கல் முறை (ரூபாய் 500/– அபராதம்) கடைசி நாள் | 09.03.2018 |

மாணவர்கள் இந்த வாய்ப்பினை தவறாது பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு : இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை.சென்னை–9**